மங்கள வைபவங்களுக்கு
ஏற்ற பட்டுப் புடைவைகள்
மற்றும் சகல விதமான
ரெடிமேற் வகைகளுக்கு
RASI
ராசி சில்க்ஸ்

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper
உதயன்
விலை
ரூபா
5-00

★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் கெற் பிங் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான
பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டு சோலை
70, 71A, சிறப்பு அங்காடி
நவீன சந்தை, யாழ்ப்பாணம்

சுடர்: 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 23 வெள்ளிக்கிழமை (09 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 13

அரசு - புலிகள் பேச்சுக்களை இந்திய அரசாங்கம் ஆதரிக்கிறது

அமைச்சர் கதிர்காமரிடம் நரசிம்மராவ் நேரில் தெரிவிப்பு

புதுடில்லி, டிசம்பர் 9

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை இந்திய அரசாங்கம் ஆதரிக்கிறது — என்று பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு தம்மைச் சந்தித்துப் பேசிய ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் பிரதமர் ராவ், தமது அரசின் நிலைப்பாட்டை நேரில் தெரிவித்தார்.

அரசு — விடுதலைப் புலிகள் பேச்சுக்கள் மூலம் ஸ்ரீலங்காவில் விரைவில் சமாதானம் ஏற்படும் எனவும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா வந்துள்ளார்.

ஸ்ரீலங்கா — இந்திய உறவுகளை வளர்க்கும் வகையில் அமைந்துள்ள அவரது விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா, பிரதமர் பி.வி. நரசிம்மராவ்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஜி.சீ.ஈ. பரீட்சை முடிவுகள் திங்கள் இங்கு வந்துசேரும்?

இன்று அல்லது நாளை கொழும்பில் வெளியிடப்படவிருக்கும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை முடிவுகள் அடுத்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பரீட்சை முடிவுகள் விமான மூலம் பலாலிக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தற்சமயம் நடைபெறும் ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்கான இறுதி நாள் பரீட்சை வினாத்தாள்களும் எடுத்து வரப்படவுள்ளன. (ஒ-3)

கிழக்கில் மீண்டும் பெரும் வெள்ளம்

மட்டக்களப்பு, டிச. 9

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் மீண்டும் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தின் பின்னர் மூன்றாவது தடவையாக அங்கு வெள்ளம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் பாரிய நீர்தேக்கமான சேனநாயக்கா சமுத்திரம் நிரம்பி வழிகிறது. சேனநாயக்கா சமுத்திரத்தின் நீர்க்கதவுகள் யாவும் திறந்து விடப்பட்டுள்ளதால் அம்பாறையின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ந்தும் நீர் வெளியேறி வருவதால் வெள்ள நிலைமை மேலும் மோசமடையலாமென அஞ்சப்படுகிறது. (இ-4)

பிளாம்பயானுக்கு பதிலாக புதிய கப்பல் சேவையில்

செஞ்சிலுவை நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிச 9

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் நோயாளர் சேவையை நடத்த புதிய கப்பல் ஒன்றை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஈடுபடுத்தவிருக்கிறது.

தற்சமயம் சேவையில் ஈடுபட்டிருந்த ''பிளாம்பயான்'' கப்பல், அதன் சேவைக்காலம் முடிவடைந்ததை அடுத்து சிங்கப்பூரில் உள்ள கப்பல் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

எதிர்காலத்தில் எந்தக் கால நிலையிலும் நோயாளர் சேவையை தடையின்றி நடத்தக் கூடிய வகையில் கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக பல கப்பல் நிறுவனங்களுடன் அந்த அமைப்பு பேச்சுக்கள் நடத்தி வருகிறது. [ஒ-3]

வடக்கு - கிழக்கு ஆளுநராக பொன்சேகா நியமனம்?

கொழும்பு, டிச. 9

கடந்த மூன்று மாதகால மாக காலியாகவுள்ள வடக்கு-கிழக்கு ஆளுநர் பதவிக்கு ஐ.தே.க. அரசின் முன்னாள் பிரதிச் சபாநாயகரான காமினி பொன்சேகா நியமிக்கப்படும் வாய்ப்பு பெரிதும் இருப்பதாக '' லங்காதீப '' செய்தி வெளியிட்டுள்ளது.

தற்பொழுது வெற்றிடமாகவுள்ள மேல்மாகாண, வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர் பதவிகளையும்— ஏனைய ஆறு மாகாணங்களின் ஆளுநர் பதவிகளையும் புதிதாக ஆளுநர்களை நியமித்து நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று அரசுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கமைய மாகாண ஆளுநர்களை இராஜினாமாச் செய்யுமாறு கேட்கப்பட்டிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ஒ-6)

இணக்கம் ஏற்பட்டதன் பின்னரே ஆனையிறவு பாதை திறக்கப்படும்

கேணல் ரத்வத்த கூறுகிறார்

கொழும்பு, டிச 9

வடபகுதி பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் பூரண இணக்கம் ஏற்படுத்திய பின்னரே ஆனையிறவுப் பாதை திறக்கப்படும்.

அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த 'தினமின' சிங்கள பத்திரிகைக்கு தகவல் தருகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடபகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்கி, அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்கும், நுகர்வுப் பொருள்களை அனுப்புவதற்கும். வடக்கில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை ஏனைய பகுதிகளுக்கு அனுப்புவதற்கும் இப்பாதை திறக்கப்படுதல் வழிவகுக்கும் எனவும் அமைச்சர் ரத்வத்த குறிப்பிட்டுள்ளார்.

ஆனையிறவுப் பாதை திறப்பதற்கு பரஸ்பர நம்பிக்கை அவசியமானது என்றும்—

இந்நம்பிக்கையை மீறாதிருப்பதற்கு, விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் இணங்கிக் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-6)

தொழிலாளரை வேலை நிறுத்தத்துக்குத் தூண்டி

புதிய அரசின் பணிகளுக்கு குந்தகம்: எதிர்க்கட்சிகள் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, டிச. 9

வெளிநாட்டு முதலீட்டாளர்களை அச்சுறுத்தி, நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிப்படையச் செய்வதற்காக —

இந்நாட்டு தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்வதற்குத் தூண்டி, அரசின் பணிகளுக்கு எதிர்க்கட்சி குந்தகம் விளைவிக்கிறது என்று அரசு நேற்று குற்றஞ்சாட்டியுள்ளது.

வெளிநாட்டுத் தொடர்புடைய பல முதலீட்டு நிறுவனங்களுக்குப் பாதிப்புத் தரும் வகையில், கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கைகள் அரசின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் நோக்குடன் — அரசியல் ரீதியாகத் தூண்டப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைச்சர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், டிச. 9

இளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ-3)

முச்சந்தி முரளி



அப்ப பதுங்குகுழி வாழ்க்கை முடியுது என்று சொல்லுங்கோ......!

புலிகளுக்கு அனுப்பிய கடிதம் குறித்து ஊர்ஜிதம்

கொழும்பு, டிச. 9

ஆனையிறவு பாதை விவகாரம் குறித்து விடுதலைப் புலிகளுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இது குறித்து பி. பி. ஸி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி குறிப்பிடுகையில்—

ஆனையிறவுப் பாதையைக் கைவிட்டு, வேறு பாதையைத் திறப்பதற்கே விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கின்றனர் என்று தெரிவித்தார்.

புலிகளின் பதில் கிடைத்ததும்

யுத்த நிறுத்த திகதி அறிவிக்கப்படும்

கொழும்பு, டிச. 9

விடுதலைப் புலிகளிடம் இருந்து பதில் கிடைத்ததும் யுத்த நிறுத்தத் திகதி அறிவிப்பு என்ற தலைப்பில் வீரகேசரி நேற்று செய்தி வெளியிட்டது.

விடுதலைப்புலிகளின் பதில் கிடைத்ததும் யுத்த நிறுத்தம் தொடர்பான திகதி முன்வைக்கப்படும். யுத்த நிறுத்தம் பரஸ்பர உடன்பாட்டின்கீழ் அமுல் நடத்தப்படும் என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த நேற்று முன்தினம் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்தார்.

யுத்த நிறுத்தம், ஆனையிறவுப்பாதை திறப்பு தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம். பதில் இதுவரை கிடைக்கவில்லை.

யுத்த நிறுத்தம் நிச்சயம் அமுல் நடத்தப்படும். ஆனால் எப்பொழுது முதல் அமுலாகும் என்று கூறமுடியாது என்றும் அமைச்சர் ரத்வத்த தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கிலிருந்து 1875 பொலீஸார் மாற்றம்

கடந்த ஐந்து வருடங்களாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பணிபுரிந்த 1,875 பொலீஸாருக்கு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் கொழும்பு மற்றும் இடங்களுக்கு இடம் மாற்றம் வழங்கும்படி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த பொலீஸ்மா அதிபர் பிராங் டீ சில்வாவைப் பணித்துள்ளார். (இ-6)

அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடு நீங்கும்

விசேட குழு நியமிக்க முடிவு

கொழும்பு, டிச. 9

அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கான விசேட குழு ஒன்று உடனடியாக நியமிக்கப்படும்.

அரசாங்கத் துறை, தனியார் துறையைச் சேர்ந்த தொழிற் சங்க தலைவர்கள் கலந்து கொண்ட மாநாடு ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற் கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி செயகத்தில் இந்த மாநாடு நடைபெற்

(4ஆம் பக்கம் பார்க்க)

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பு:

ஹெந்தளையில் கைதான நபர் சித்தசுவாதீனமற்றவர்

அவர் தொடர்ந்து காவலில்

கொழும்பு, டிச. 9

காமினி திஸாநாயக்கா கொலையுண்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகத்தில் ஹெந்தளையில் கைதான எஸ். டபிள்யூ. ஜோசப் யோகநாதன் என்பவர் சித்த சுவாதீனமற்றவர் என்று விசாரணையின்போது தெரியவந்துள்ளதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

ஹெந்தளை மனாகொடையில் வசித்து வந்தவரான

(4ஆம் பக்கம் பார்க்க)

ஆயிரம் தொன் மாவுடன் 'குமண' இன்று வருகிறது

ஆயிரம் மெற்றிக் தொன் மாவுடன் 'குமண' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்று நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட மா தட்டுப்பாட்டை அடுத்து. பருத்தித்துறையில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 'குமண' கப்பல் அவசரமாக திருகோணமலைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சென்றிருந்தது.

திருகோணமலை பிரிமா ஆலையில் இருந்து மா ஏற்றிக்கொண்டு இக்கப்பல் நேற்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பிலிருந்து பொருள்களை தருவிப்பதற்கு புதிய நடைமுறை

யாழ். செயலகத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், டிச. 9

யாழ்ப்பாண மாவட்டத்துக்குத் தேவையான உணவு மற்றும் பாவனைப் பொருள்களைக் கொழும்பில் இருந்து தருவிப்பதற்கு ஒருமுகப்படுத்தப்பட்ட புதிய வழிமுறை ஒன்றை அமுல் செய்வதற்கு புதிய அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் முடிவு செய்திருக்கிறார்.

இதன் பிரகாரம் கொழும்பிலிருந்து பொருள்களைக் கொண்டு வருவதற்கான ஆரம்பப் பணிகள் யாழ். செயலகத்திலேயே மேற்கொள்ளப்படும்.

புதிய நடைமுறையின் கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ள அரசாங்கத் திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறையினர், வர்த்தகர்கள் தாம் கொழும்பில் இருந்து எடுத்துவர விரும்பும் பொருள்கள் அடங்கிய விண்ணப்பங்களை யாழ். செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

குறிப்பிட்ட நேரத்தில் தேவைப்படும் பொருள்களை இனங்கண்டு அவற்றைத் தருவிப்பது என்ற அடிப்படையில், கப்பலில் இடஒதுக்கீடு வழங்கப்படும்.

அதன் பின்னர் யாழ். செயலகத்தால் வழங்கப்படும் கடிதத்தைக் கொழும்புக்கு எடுத்துச் சென்று, அங்குள்ள நடைமுறைப்படி அனுமதி பெற்று பொருள்களைக் கப்பலில் ஏற்றிவர முடியும்.

ஒருமுகப்படுத்தப்பட்ட இந்த முறையின் கீழ் பொருள்களைக் கொண்டு வந்தால் அடிக்கடி உண்டாகும் தட்டுப்பாடுகளைத் தவிர்க்கமுடியும் என நம்பப்படுகிறது. (அ-3)

புலிகளுக்கு வெடிப் பொருள்கள் விற்றதாக உக்ரைன் அரசு அறிவிப்பு

கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு, டிச. 9

விடுதலைப் புலிகளுக்கு பெருந்தொகையான வெடிப்பொருள்களை தாம் விற்றதாக உக்ரைன் அரசாங்கம் இலங்கை அரசுக்கு அறிவித்திருப்பதாக '' த ஐலண்ட்'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

10 தொன் ஆர். டி. எக்ஸ் (R.D.X) பிளாஸ்டிக் வெடிப்பொருள்கள் 20 தொன் டி. என். டி (T. N. T) வெடிப் பொருள்கள் ஆகியவற்றை உக்ரேனியன் அதிகாரிகள் விற்றதாகவும் —

(4 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

3, 4 அங்குல எஸ்–லோன் பைப்புகள், பொலித்தீன் தாள் சகல அளவுகளிலும் சொப்பிங் பாக் சகல அளவுகளிலும் அலுமினியம் தாச்சிகள், எனாமல் பெயின்ற் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. நாதன் களஞ்சியம், 213 C, மருத்துவமனை வீதி (கிட்டு சாலை), யாழ்ப்பாணம்.
[33981]

மானிப்பாயில் இரண்டரைப் பரப்பு காணியில் ஐந்து அறைகள் மற்றும் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு, சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: நாகேந்திரம், மே/பா மல்லிகா ஸ்ரோர்ஸ், மத்திய சந்தையடி, மானிப்பாய்.
(34071)

சகல விடுமுறை நாட்களும் (தமிழீழம் உட்பட) அடங்கிய அழகிய படத்துடனான கலண்டர் ரூபா 5/50 மட்டுமே. பெரிய நடுத்தர கலண்டர்களும் பதிப்பித்தும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையன் பதிப்பகம் பதிப்பக சாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம்.
[33928]

ஐஸ்கிறீம் தயாரிக்கும் இயந்திரமும் (3 H. P.) 17 H. P. லிஸ்டர் இயந்திரத்துடன் கூடிய 7½ K. V. மின் பிறப்பாக்கியும் விற்பனைக்குண்டு. (தற்போது இயங்கிக்கொண்டிருக்கின்றது) விவரங்களுக்கு: செந்தாமரை (றிக்கோ), 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி–9884)

வெள்ளை நிற 2½ மாத பொமனேரியன் ஆண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. பூச்சி நீக்கப்பட்டுள்ளது. 58, வேம்படி றோட், யாழ்ப்பாணம்.
(8064)

மணப்பெண் தேவை

பண்பான இந்துக் குடும்பம், வயது 33, நட்சத்திரம் மகம், 5இல் செவ்வாய் கிரக பாவம் குறைந்த கொழும்பில் பணிபுரியும் பொறியியலாளருக்கு (Electronic) Communication Engineers படித்த, அழகிய, பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர். சாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். 729, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
(34089)

பெண் கட்டர் தேவை

ஆடை தயாரிப்பு நிலையம் ஒன்றுக்கு விதம் விதமாக மாதிரி உடைகள் வெட்டிக் கொடுப்பதிலும், மற்றும் உள்ளங்கி (பிறா) வெட்டித் தைப்பதிலும் பயிற்சி உள்ள பெண்கள் தேவை. 31-12-94 முன்பாக விண்ணப்பிக்கவும். இல. 728, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (சி–9883)

மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் குறைந்த செலவில் திருத்திக்கொடுக்கப்படும். சகல மணிக்கூட்டு பற்றரிகளுமுண்டு. கஜன்ஸ் வோச் வேக்ஸ், 12, புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் (சந்திக்கருகில்). (7826)

சகலவித மணிக்கூடுகளையும் மற்றும் றேடியோக்கள், ரி. வி. டெக்குகளை பழுது பார்த்துக் கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (சி–9912)

உத்தியோகத்தர் மீள் நியமனம்

யாழ்ப்பாணம், டிச. 9

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் கடமையாற்றி ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு மீள் நியமனம் வழங்கும் போது அவர்களுக்கு மேற்பார்வையாளர் தரம் பதவிகள் வழங்கப்படக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மீள் நியமனம் வழங்கப்படும் போது அவர்கள் ஏற்கனவே வகித்த பதவிகளில் அல்லாது வெளிக்கள வேலைகளுக்கும் சிகிச்சைக் களங்களுக்கும் மட்டுமே வேலைக்கு அமர்த்தப்படல் வேண்டும் எனவும் மீள் நியமிக்கப்படும் உத்தியோகத்தர் அச் சேவையில் புதிதாக சேர்ந்தவராகக் கணிக்கப்படல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சு–4)

பரிசாரகர் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், டிச. 9

யாழ். சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த 50 பரிசாரர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் பரிசாரருக்கான பயிற்சி வகுப்பு ஆரம்பமாகியுள்ளது.

இப்பயிற்சி வகுப்பு மூன்று மாதங்களுக்கு நடைபெறும். (க-17)

31-ம் நாள் நினைவலைகள்

மண்ணில்:
13
—
10
—
1910

விண்ணில்:
13
—
11
—
1994

திருமதி அமரசிங்கம் அன்னமுத்து

அன்பின் பிறப்பிடமே!
பண்பின் சிகரமே!
அன்னமிட்டு அறிவூட்டி
எமை வளர்த்த தாயே!
எந்நாளும் உம்நினைவு
எம்மனதில் அலையாய்
மோதிக் கொண்டேயிருக்கும்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;
மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள் சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.

சித்தன்கேணி.
(சி/9935)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை - மானிப்பாய்

1995 ஆம் ஆண்டு சந்தைகளுக்கான

கேள்வி அறிவித்தல்

மேற்படி கேள்வியின் பொருட்டு உதயன் / ஈழநாதம் பத்திரிகைகளில் 1994 – 11 – 17 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட எனது 1994 – 11 – 16 ஆம் திகதிய கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக, கீழ்க்காணும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட விவரங்களின் படி கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி: 1994 – 12 – 22 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும்
2. கேள்விகள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி: 1994 – 12 – 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-00 மணி
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி: 1994 – 12 – 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11-00 மணி

உபஅலுவலகம்	குத்தகையின் தன்மை	கடையின் மாத வாடகை	கேள்வி வைப்பு பணம்	மீளளிக்கப்படாத கேள்விப் பிணைப் பணம்	நிர்ணயிக்கப்பட்ட தொகை
மானிப்பாய் பட்டினம்:					
	கட்டுடை சந்தை		300/-	100/-	500/-
மானிப்பாய் கிராமம்:					
	ஆட்டிறைச்சிக் கடை நவாலி பிரசாத் சந்தை	250/-	1,000/-	100/-	11,110/-
	கருவாடு/ தேங்காய் கடை சாவற்கட்டு சந்தை	100/-	500/-	100/-	1,155/-
பண்டத்தரிப்பு கிராமம்:					
	மாட்டிறைச்சிக் கடை மாகியப்பிட்டி சந்தை	100/-	1,000/-	100/-	15,400/-
	ஆட்டிறைச்சிக் கடை மாகியப்பிட்டி சந்தை	100/-	1,000/-	100/-	10,000/-

இ. கணேஸ்வரன்,
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய் 1994 – 12 – 08

[சி-9934]

நன்றி நவிலல்

அமரா இராயப்பு றோசம்மா

(சில்லாலை தெற்கு பண்டத்தரிப்பு)

எமது தாயார் நோயுற்று திருச்சிலுவை கன்னியர் சுகநல சேவை நிலையத்தில் இருந்த வேளை அவரை அன்புடனும், பொறுமையுடனும் பராமரித்த திருச்சிலுவை கன்னியர் வைத்தியசாலை வைத்தியர், கன்னியர், தாதியர் உதவியாளர் அனைவருக்கும் சிறப்பாக எமது தாயாரை வந்து ஆசீர்வதித்த அதி வணக்கத்திற்குரிய யாழ். மன்னார் மேற்றாசன ஆயர்களுக்கும் மற்றும் குருக்கள், கன்னியர்களுக்கும்,

அவரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட குருக்கள், கன்னியர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிள்ளைகள் -: புஸ்பம், ராணி, பேபி,
Sr. ஜெம்மா [H. H. C],
லீலா, பஞ்சரெட்ணம்.

(சி–9900)

யா/திருக்குடும்ப கன்னியர்மடம்
யாழ்ப்பாணம்.

ஆண்டு - 6 அனுமதி (1995)

எமது பாடசாலையில் 1995ஆம் ஆண்டு ஆறாம் ஆண்டிற்கு விண்ணப்பித்தவர்களும், அனுமதிகோர விரும்புபவர்களும் ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையிலும், தமிழீழ முதனிலைத் தேர்வில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையிலும் அனுமதிக்கப்படுவர். எனவே மேற்படி இரு பரீட்சைப் பெறுபேறுகளையும் தற்போது கற்கும் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தி 16–12-94க்கு முன்னர் பாடசாலை அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

— அதிபர்.

(34102)

ஓராண்டு பூர்த்தி நினைவு



அமரர் செல்லையா சேனாதிராஜா

தோற்றம்:
02 — 04 — 1924

மறைவு:
20 — 11 — 1993

திதி: 09 — 12 — 1994

அன்பின் திருவுருவாய், பாசத்தின் இருப்பிடமாய், எங்கள் குடும்பத்தின் நாயகனாய் எம்மையெல்லாம் வழி நடத்தி எங்கள் ஒளிவிளக்காய் திகழ்ந்த குல தெய்வமே! நீங்கள் எமக்காகவே வாழ்ந்து எமையெலாம் வாழவைத்து நினையாப் பிரகாரமாய் மறைந்து விட்ட தெய்வமே! ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு ஒரு வருடம் மறைந்து விட்டாலும், எமக்கு வழிகாட்டும் தெய்வமாக, எம் இன்பத்திலும், துன்பத்திலும் எமைப் பிரியாமல் எங்களோடு வாழ்கின்றீர்கள். நீங்கள் காட்டிய வழியே நாம் நடப்போம். நீங்கள் நிஜமாக எங்களுடன் வாழ முடியவில்லையென்றாலும் நிழலாக எங்களுடன் வாழ்கின்றீர்கள்.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் கண்ணீர்ப்பூக்கள் கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அம்மன் கோவில் வீதி,
[illegible]

(34081)

இந்து அக்கடமி

வளாக ஒழுங்கை, திருநெல்வேலி.

ஒன்பதிலிருந்து பதினொன்று வரை

இந்துவின் வாண்மையாளர்கள்:

கணிதம்	— ம, ஸ்ரீதரன்
விஞ்ஞானம்	— ம. கஜேந்திரன
தமிழ்	— ந. தங்கவேல்
சமூகக்கல்வி	— வ. நடராஜா க. நித்தியானந்தம்

ஆரம்பம்: 10 - 12 - 1994
காலை 7-30 மணி

[34104]

யா / டிறிபேக் கல்லூரி
சாவகச்சேரி.

அனுமதி - 1995

ஆண்டு 6, ஆண்டு 9

வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. முதனிலை, இளநிலைத் தேர்வுப் புள்ளிகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 25 – 12 – 1994

- அதிபர்.

யா / டிறிபேக் கல்லூரி,
சாவகச்சேரி.

[34105]

இதய அஞ்சலி

ஊர்காவற்றுறை சுருவிலூர் ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் கோயில் பிரதம குருவாகிய கிரியாகலாப முத்தாமணி சிவஸ்ரீ

சோ. நடராஜக்குருக்கள்

26 - 11 - 1994 அன்று சிவபதம் அடைந்தார்கள். அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகிறோம்.

சுருவில் ஐயனார் கோயில்
பரிபாலன சபையினர்.

[இன்று (09-12-94) அவரது இருகயக்குக் கிரியைகள் அன்னாரது திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற உள்ளது]

(34087)

2ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு:
15
—
07
—
1933

உதிர்வு:
30
—
12
—
1992

சுப்பிரமணியம் அமரசிங்கம்

(இளைப்பாறிய பிரதம லிகிதர், காட்டுக்கந்தோர், யாழ்ப்பாணம்)

திதி: 09 — 12 — 1994

கண்ணிலே நின் உருவம் – எம்
காதிலே நின் உரைகள்
நெஞ்சிலே நின் நிழற்படங்கள் – நித்தம்
நம் மனதிலே நின் நினைவலைகள்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி, மக்கள், மருமகள்,
பேரன்.

நெசவுசாலை வீதி,
வீமன்காமம்,
தெல்லிப்பழை.

(சி–9889)

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

சந்திரிகாவும் சதியும்

தமது தலைமையிலான அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சதி ஒன்று நடைபெற்றுக் கொண்டிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தகவல் வெளியிட்டிருக்கிறார்.

சர்வதேச மோசடிக்காரரும், உள்ளூர் பதுக்கல்காரரும் உட்பட்ட மக்கள்விரோத சக்திகளே இந்தச் சதியில் ஈடுபட்டுள்ளன. அவர்கள் எனது அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளையும் சீர்குலைக்க முற்படுகின்றார்கள் — என்று தொழிற்சங்க மாநாடு ஒன்றில் பேசுகையில் ஜனாதிபதி கூறியுள்ளார்.

சந்திரிகா கூறுவதில் உண்மை இல்லாமல் இல்லை. பொது மக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்து, மூன்றரை மாதங்கள் தான் ஆகின்றன. இந்தச் சொற்ப காலத்தில் அரசுக்குப் பெரும் தலையிடி வந்திருப்பது அப்பட்டமாகத் தெரிகிறது!

பொதுத் தேர்தல் காலத்தில் பொ. ஐ. முன்னணியினர், முந்திய அரசின் சீர்கேடுகளையும், துஷ்பிரயோகங்களையும், அநீதிகளையும் அக்கு வேறு ஆணி வேறாக மக்களுக்குப் பிய்த்துக் காட்டினர். அவற்றை போக்குவதற்கு தாம் உறுதி பூண்டிருப்பதாகவும் தெரிவித்தனர். அந்த வகையில் அவசர அவசரமாக பல பளிச்சிடும் வாக்குறுதிகளை வழங்கினர். அவற்றுள் எண்ணித் துணியாத வாக்குறுதிகள் பல.

பதவியில் அமர்ந்த பின்னர், வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகின்றனர். அவற்றை நடைமுறைப் படுத்தப் போய், பல பக்க விளைவுகளையும், புதிய சிக்கல்களையும் விலைக்கு வாங்க வேண்டியதாகிறது! அத்தோடு பழைய அரசாங்கம் செய்த தவறுகளைச் சீர்ப்படுத்தப் போகும் போது இதுவரை சலுகைகளை அனுபவித்து வந்த சாராரின் எதிர்ப்புகளையும், சூழ்ச்சிகளையும் எதிர்நோக்க வேண்டியுமுள்ளது.

முந்திய அரசு, உணவுப் பொருள்கள் உட்பட்ட அத்தியாவசிய பாவனைப் பொருள்களை இறக்குமதி செய்யும் ஏகபோகத்தை தனியார் துறைக்கு வழங்கியிருந்தது. அதனை மாற்றி, இறக்குமதி வர்த்தகத்தில் அரசாங்கமும் போட்டி போட்டு இறங்க முனைவதால், உள் நாட்டு வர்த்தகப் பெரும் புள்ளிகள் பல சூழ்ச்சிகளைச் செய்கிறார்கள். உணவு மற்றும் பாவனைப் பொருள்களுக்கு செயற்கைத் தட்டுப்பாட்டை உண்டாக்கி இருக்கிறார்கள்.

தனியார் மயப்படுத்தப் பட்ட நிறுவனங்களின் நிர்வாகம், சுதந்திர வர்த்தக வலய ஊழியருக்குத் தொழிற்சங்க உரிமை, அரசாங்க ஊழியரின் சம்பள உயர்வு விவகாரம், மக்கள் தொடர்பு சாதனங்களுக்கு சுதந்திரம் போன்ற விடயங்கள் பெரும் பூதாகரமாகியுள்ளன!

மேலும் அரசாங்கத்தின் திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கை ஒன்று அறிவிக்கப் படாததால் வர்த்தக, வாணிப, கைத்தொழில், விநியோகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் இன்னும் திக்குத் தெரியாத காட்டில் புகுந்த நிலையில் உள்ளார்கள்.

ஆட்சி நடத்துவது என்பது இலகுவான தொழில் அல்ல. நிமிடத்துக்கு ஆயிரம் பிரச்சினைகள் வரும்; போகும். அழுத்தங்கள், நிர்ப்பந்தங்கள், சவால்கள் மத்தியில் எதிர்நீச்சலடித்து நிற்க நேரிடும். மக்கள் ஆட்சி முறையின் கீழ், எந்த நாட்டுத் தலைவருமே நிரந்தரமாக மலர்க்கிரீடம் அணிய முடியாது. அதிக நாள்களுக்கு முட்கிரீடத்தையே சூட நேரிடும்.

எனவே சந்திரிகா தமது அரசைக் கவிழ்ப்பதற்கு சதி என்று பதற்றப்படாமல், எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்வதென்ற கோட்பாட்டை மட்டுப்படுத்தி, அரசியல் தந்திரத்துடனும், உபாயங்களுடனும் செயற்படத்துணிய வேண்டும். எண்ணித் துணிக கருமம் என்ற வள்ளுவர் வாக்கு அவருக்குப் பெரிதும் உதவும்!

சந்திரிகாவுக்கு பரிசு அனுப்பியதால்

சுசில் முனசிங்காவுக்கு கட்சிக்குள் கடும் எதிர்ப்பு!

கொழும்பு, டிச. 9

கொழும்பு மாவட்ட ஐ. தே. க. எம். பியும் மேல் மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சருமான சுசில்முனசிங்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு மிகவும் பெறுமதி வாய்ந்த மலர்ச் செண்டு அனுப்பி வாழ்த்துத் தெரிவித்த விவகாரம், ஐக்கிய தேசியக் கட்சியினுள் அவருக்கு கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மலர்ச் செண்டு விவகாரம் ஐ. தே. கவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் காரசாரமாக விவாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விலை உயர்ந்த அந்த மலர்ச்செண்டு, ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாகவும் சொல்லப்படுகிறது.

கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்கான போட்டியின் ஆரம்பத்தில் விஜேபாலமெண்டிஸ், எம். எச். முஹம்மது மற்றும் டிரோன்பெர்னாண்டோ ஆகியோரின் பெயர்களுடன் முனசிங்காவின் பெயரும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்ததாகவும்—

பிரதித்தலைவருக்கான தெரிவு நடைபெற்றிருந்தால் சுசில் முனசிங்காவே தெரிவு செய்யப்படக் கூடிய வாய்ப்பு இருந்ததாகவும் தெரிவிக்கப் பட்டது. (ஐ-எ)

சந்திரிகாவும் ரணிலுமே எஞ்சியுள்ள தலைவர்கள்

பொலிஸ் அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, டிச. 9

தென் இலங்கையில் தற்போது எஞ்சியிருக்கும் தலைசிறந்த இரு தலைவர்களான சந்திரிகா குமாரணதுங்காவையும் ரணில் விக்கிரமசிங்காவையும் நாம் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு கொழும்பில் பொலீஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக இந்தியாவில் இருந்து வெளிவரும் ''புரொண்ட்லைன்'' ஆங்கில இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

எம்மிடம் எஞ்சியிருக்கும் தலைசிறந்த தலைவர்கள் இவர்கள் இருவரும் தான். இவ்விருவரையும் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். ஏனெனில் எமது தேசியத் தலைவர்கள் எல்லாம் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருவதை நாம் காண்கின்றோம் என்றும் அந்த பொலீஸ் அதிகாரி கூறியதாக ''புரொண்ட்லைன்'' சஞ்சிகை தெரிவித்துள்ளது. (ஐ-எ)

சமாதானப் பேச்சினை அரசு தொடர வேண்டும்!

ஈ. பி. ஆர். எல். எப். வலியுறுத்து

கொழும்பு, டிச. 9

தடங்கல்கள், இடையூறுகளைக் கவனியாது அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை தொடர வேண்டும் என்று ஈ. பி. ஆர். எல். எப் குழு ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

நாட்டில் நிரந்தர அமைதி, சமாதானம் ஏற்பட அரசு சமாதான பேச்சுகளை முன் எடுத்துச் செல்ல வேண்டும் என்று ஈ. பி. ஆர். எல். எப். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டார்.

அனைத்து சமாதானப் பேச்சுக்களிலும் தடங்கல்கள், இடையூறுகள் ஏற்படுவது வழக்கம். அவற்றைக் கவனத்தில் கொள்ளாமல் சமாதான முயற்சியை தொடர வேண்டும் என்று அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார். (ஐ-எ)

மன்னார்-கற்பிட்டி இடையே மீண்டும் கப்பல் சேவை

கொழும்பு, டிச. 9

சாகரவர்த்தனா கடற்படை யுத்தக் கப்பல் விடுதலைப் புலிகளினால் மூழ்கடிக்கப்பட்டதை அடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மன்னார் — கற்பிட்டி கப்பல் சேவை கடந்த செவ்வாய் மீண்டும் ஆரம்பமானது.

'ஐரிஸ்மானா' என்ற பெயர் கப்பலே அன்றைய தினம்சேவைக்குவிடப்பட்டது. சுமார் 250 பயணிகளுடன் இந்தக் கப்பல் புறப்பட்டு தாழ்வுபாடு அடைந்தபோது மன்னார் மேலதிக அரச அதிபர் குருஸாம் ஏனைய அதிகாரிகளும் வரவேற்றனர்.

மஹியங்கனை தொகுதிக்கு ரணில் விஜயம் செய்வார்

செயற்குழு கூட்டத்தில்அவரே தகவல்

விரைவில் மஹியங்கனைத் தொகுதிக்கு தாம் விஜயம் செய்யப்போவதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா அறிவித்திருக்கிறார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக்கூட்டத்தின் பின்னர் அவர் இத்தகவலை வெளியிட்டார்

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹியங்கனைத் தொகுதியில் மட்டுமே ஐக்கிய தேசியக்கட்சி வெற்றியீட்டியது தெரிந்ததே.

உடல் ஊனமுற்றோருக்கு கோழி வளர்ப்பில் பயிற்சி

யாழ்ப்பாணம், டிச. 9

கொழும்புத்துறை வீதியில் உள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் ஊனமுற்றவர்களுக்கு இறைச்சிக் கோழி வளர்ப்பு சம்பந்தமான பயிற்சியை வழங்கி வருகின்றது.

முதற்கட்டமாக ஆறு ஊனமுற்றவர்களுக்கு இப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சியில் கோழி வளர்ப்பு, கோழியை நோய் பிடிக்காமல் எவ்வாறு பாதுகாத்தல், கோழிகளுக்கு எவ்வகை மருந்து, உணவு போன்றவற்றை கொடுத்தல் சம்பந்தமான பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

பயிற்சி வகுப்பு 45 நாட்கள் நடைபெறும்.

பயிற்சி முடிவில் பயிற்சியில் ஈடுபட்டவர்களுக்கு இலவசமாக கோழிக் குஞ்சுகள் வழங்கப்படும்.

பயிற்சி வகுப்பில் சேர விரும்பும் ஊனமுற்றவர்கள் மேற்படி சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கத்தின் செயல் திட்டப் பொறுப்பாளர் திரு. ஜே. எம். சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். (ஐ-17)

அளவெட்டியில் ஆயுள்வேத வைத்தியசாலை

பயன்தரு மரக்கன்றுகள் யாழ்ப்பாணம் பிரதேசச் செயலாளர் அலுவலகத்தினால் இப்போது இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

மரக்கன்றுகளை பெற்றுக் கொள்ள விரும்பும் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் ஏனைய பொது அமைப்புக்கள் தத்தமது நிலைய கடிதத் தலைப்புக்களில் தலைவர், செயலாளரின் கையொப்பங்களுடன் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-161)

நான் பேசியவை பொய்யாக இருந்தால் மேடையைவிட்டு உயிருடன் இறங்கமாட்டேன்!

இறுதிப் பேச்சில் ஒஸி தெரிவித்தார் இப்படி!

''நான் பேசிய விஷயங்கள் பொய்யானவையாக இருந்தால், இந்த மேடையில் இருந்து உயிருடன் இறங்கிச் செல்ல வாய்ப்பே எனக்கு கிடைக்காது''—

அவர் இவ்வாறு பேசி முடித்த சில நிமிடங்களில் பெரும் சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்தது. அதில் பலர் இறந்தனர். படுகாயங்களுடன் மருத்துவமனைக்கு அந்தப் பேச்சாளர் உட்பட இன்னும் பலர் கொண்டு போகப்பட்டனர்.

பதின்மூன்று தினங்களுக்கு மேல் மயக்க நிலையில் சிகிச்சை பெற்றுவந்த அந்தப் பேச்சாளர் தமது கடைசிப் பேச்சின்படியே உயிரிழந்தார்.

அவர்தான் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஒரு பிரிவின் தலைவரும், கொழும்பு மாவட்ட ஐ. தே. க. எம். பியுமாகவிருந்த ஒஸி அபயகுணசேகரா.

கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பு சம்பவத்தில் காமினி திஸநாயக்காவுடன் கொல்லப்பட்ட முன்னணி அரசியல்வாதிகளில் இவரும் ஒருவர்.

கிராண்ட்பாஸ் கூட்டத்தில் ஒஸியின் உரைபற்றிய இந்த விஷயத்தை ''கிணி ஹிர'' சிங்கள வார இதழ் பின்வருமாறு தந்துள்ளது:—

அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தவர், அடுத்ததாக சந்திரிகாவைப் பற்றி பல விஷயங்களை அறிந்த அனுரா பேசுவார் என்று அறிவித்தார்.

ஆனால் அனுராவோ, ''என் சகோதரியைப் பற்றி என்னைத் தவிர வேறு எவரும் நன்றாக அறிந்திருக்க முடியாது. சந்திரிகா திடீரென்று சிங்கப்பூர் சென்ற மர்மம் என்ன? இது பற்றி மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். விஜயகுமாரணதுங்கா, சந்திரிகாவுடன் நீண்டகாலம் தொடர்பு கொண்டிருந்த ஒஸி அபயகுணசேகரா எனக்குப்பின் பேசும்போது, சந்திரிகாவின் உண்மை நிலையை தெரிவிப்பார்'' — என்று பேசிவிட்டு மேடையில் அமர,

ஒஸி பேச்சை ஆரம்பித்தார்.

சந்திரிகாவின் நடத்தை, அவர் ஏன் சிங்கப்பூர் சென்றார் போன்ற விஷயங்கள் பற்றி வெளியே கூற முடியாதவற்றை எல்லாம் ஒஸி தனது பேச்சில் விவரித்தார் என்றும் —

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை கொள்கை ரீதியாகத் தாக்க முடியாத காரணத்தினால் ஒஸி, சந்திரிகாவின் தனிப்பட்ட விஷயங்களில் குறைகாண முற்பட்டார் என்றும் 'கிணிஹிர' இதழ் தெரிவித்தது.

பேச்சின் முடிவாக —

நண்பர்களே! நான் பேசிய விஷயங்கள் எல்லாம் பொய்யானவையாக இருப்பின் இந்த மேடையில் இருந்து உயிருடன் இறங்கிச் செல்ல எனக்கு வாய்ப்பிருக்காது'' — என்று ஒஸி தெரிவித்தார்.

அக்கூட்டத்தில் கலந்து கொண்டு உயிர் தப்பிய பலரும் ஒஸியின் இப்பேச்சை பற்றியே இன்னும் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று ''கிணி ஹிர'' இதழ் தெரிவித்துள்ளது. (ஐ எ-10)

ஜனாதிபதி தேர்தல் வாக்குகள் மூலம் எம். பிக்களை நியமிக்க யோசனை

மக்களின்ஆணை பெற கருத்துக்கணிப்பு

கொழும்பு, டிச. 9

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் கட்சிகளுக்கு தொகுதி ரீதியாக அளிக்கப் பட்ட வாக்குகளின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமிப்பதற்கு மக்களின் ஆணையைப் பெறும் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்த வேண்டும் என்ற யோசனையை அரச எம். பிக்கள் சிலர் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

இதற்கு மக்களின் சம்மதம் கிடைக்கும் பட்சத்தில், பலமான, ஸ்திரமான அரசாங்கத்தை அமைக்கலாம் என்றும்—

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மஹியங்கனை தொகுதி உறுப்பினர் பதவி மட்டுமே கிடைக்கும் என்றும் அவர்கள் எதிர்பார்ப்பதாக 'கிணி ஹிர' சிங்கள வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

புதிய அரசமைப்புத் திட்டத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு தர மறுக்கும் பட்சத்தில் தமது இத்திட்டத்தை அரசின் கவனத்துக் குக் கொண்டு வந்து செயற்படுத்த முடியும் என்று அந்த எம். பிக்கள் நம்பியுள்ளனர் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அரசுக்கு நாடாளுமன்றத்தில் போதுமான பெரும்பான்மை இல்லாத காரணத்தினால், ஆட்சியை தொடர்ந்து நடத்துவதில் பல சவால்களை எதிர்நோக்க நேரிடும் என்று அரசு அஞ்சுவதாகவும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-எ-10)

புலிகளின் குரல் வானொலியில்

09 — 12 — 1994
வெள்ளி இரவு

- ★ 8-01 — கலைமஞ்சரி— நூல் அறிமுகம் அறிமுகமாவது ''காந்தரூபன் அறிவுச்சோலையின் 1ஆம் ஆண்டு நிறைவையொட்டி வெளியிட்ட மலர்'' சிறுகதை— தமிழ்க்கவி எழுதிய ''கருங்காலிப் பூக்கள்'' கவிதை — ந.கிருஷ்ணா எழுதிய ''ஆகும் தமிழீழம்''
- ★ 8-25— கணப்பொழுது —சி. கண்ணம்மா எழுதிய ''வீரவேங்கை அன்பு''
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8 40 — அரசியல் அரங்கம்—வே. பாலகுமாரன் எழுதிய ''அமைதி பற்றிய போதிப்பு ஆயுதத் தயாரிப்பில் பாதிப்பு''
- ★ 8-50—வாத்திய கானங்கள்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

10 —12 — 1994
சனி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்.
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7 -35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.
- ★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

தொலைக்கல்வி கற்கைஅமர்வுகள்

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் அமைந்துள்ள தொலைக்கல்வி நிலையத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் சகலபிரிவினருக்குமான கற்கை அமர்வுகள் நடைபெற இருக்கின்றன. எனவே அந் நிலையத்தில் கடமையாற்றும் சகல போதனாசிரியர்களையும், பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களையும் தவறாது சமூகம் தருமாறு சிரேஷ்ட போதனாசிரியர் தெரிவித்துள்ளார். (ஐ)

ஐ. தே. கட்சியின் பிரதித் தலைவராக சிறிசேனா கூரேயை நியமிக்க முயற்சி!

கொழும்பு, டிச. 9

முன்னாள் அமைச்சர் சிறிசேனாகூரேயை ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் சேர்த்து அவருக்கு முக்கிய பதவியை வழங்க வேண்டும் என்று கோரி கட்சியின் பலம் வாய்ந்த பிரிவு ஒன்று தீவிரமாகச் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதனை நிறைவேற்றுவதற்கு ஏதுவாகவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு பிரதித்தலைவர் ஒருவரை நியமிப்பதில்லை என்ற முடிவு கடந்த ஐ.தே க. செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கூரேயை மீண்டும் சேர்ப்பதற்கு இன்னொரு பிரிவினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் என்றும்—

இந்த கூரே எதிர்ப்பு உணர்வு தணிந்த பின்னர் கூரே கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்கு நியமிக்கப்படுவார் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை—

சிறிசேன கூரே திரைமறைவில் இருந்துகொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைமைப் பீடத்துக்கு ஆலோசனைகளை வழங்கி வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

விஜேதுங்கா கட்சித் தலைவராகவும் ஜனாதிபதியாகவும் இருந்த காலத்தில் சிறிசேனகூரே படிப்படியாக ஓரங்கட்டப்பட்டு இறுதியில் கட்சியில் இருந்தே ஒதுக்கி வைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-எ)

தென்மராட்சிப் பகுதியில் 9 மாத காலத்தில்

36 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர்!

தென்மராட்சி, டிச. 9

தென்மராட்சி பகுதியில் இவ்வாண்டின் முதல் 9மாத காலத்தில் 36 ஆயிரத்து 537 பேர் காய்ச்சல் காரணமாகப் பாதிக்கப்பட்டனர் என்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக புள்ளி விவரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இவர்களில் 30ஆயிரத்து 76 பேருக்கு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டது.

இவர்களில் 8 ஆயிரத்து 879 பேர் மலேரியா காய்ச்சலினாலும்591பேர்மூளை மலேரியாவினாலும், 11பேர் கலப்பு மலேரியாவினாலும் பாதிக்கப் பட்டது தெரியவந்துள்ளது.

இவை தவிர கடந்த ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் தென்மராட்சிப் பகுதியில் சுமார் 4ஆயிரம் பேர் பலவித காய்ச்சல்களினால் பீடிக்கப் பட்டுள்ளனர். (ஐ-117)

கந்தளாய் சீனித் தொழிற்சாலை:

விற்பனையில இடம்பெற்ற மோசடி பற்றி விசாரிக்குக

ஜனாதிபதியிடம் கோரிக்கை

நானூறு கோடி ரூபாவுக்கு அதிகமான பெறுமதியுள்ள கந்தளாய் சீனித் தொழிற்சாலையை 3கோடிரூபாவுக்கு வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்த சம்பவம் குறித்து முறையிட்டு விசாரணை நடத்துமாறு திருமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் திருமலை மாவட்டப் புனருத்தாரணப் பணிகளுக்கான இணைப்புச் செயலாளருமான எம். கே. பி. எஸ். குணவர்த்தன ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரியுள்ளார். (ஐ-க-6)

யாழ். ஆஸ்பத்திரியில் எரிபொருள் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், டிச 9

யாழ். போதனா வைத்தியசாலையில்எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

தற்போது கையிருப்பில் உள்ள சொற்ப எரிபொருள் முடிந்தால் ஆஸ்பத்திரி மின் விநியோகம் பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது.

கடந்த ஒக்ரோபர், நவம்பர் ஆகிய மாதங்களுக்கான கோட்டாவான மண்எண்ணெய், டீசல் என்பன கொழும்பில் இருந்து இங்கு வந்து சேராததினாலேயே வைத்தியசாலையில்எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

''பிளாம்பயான்'' கப்பலிலேயே வைத்தியசாலைக்குரிய எரிபொருள், மருந்துப் பொருள்கள் எடுத்து வரப்படுவது வழக்கம்.

இக்கப்பல் தற்போதுதிருத்த வேலைக்காக சிங்கப்பூருக்குச் சென்றிருப்பது தெரிந்ததே. (ஐ-17)

நிரந்தர குடிசைகள்

இலங்கை சர்வோதய அமைப்பின் யாழ். மாவட்ட நிலையம், நாவாந்துறை மண்பிட்டிப் குதியில் வசதி குறைந்த மக்களுக்கு முப்பத்தேழு குடிமனைகளை அண்மையில் அமைத்து வழங்கியுள்ளது. (க-30)

பாடசாலை மீண்டும் இயங்கும்

தென்மராட்சி, டிச. 9

கைதடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அடுத்த ஆண்டு ஜனவரி முதல் தவணையுடன் மீண்டும் இயங்கவுள்ளதாக தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் அறிவித்துள்ளார். (க-117)

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

(புதிய கல்வி ஆண்டு - 1995)

O/L சனி, ஞாயிறு (SAT, SUN)
வகுப்புக்கள் ஆரம்பம்
10 - 12 - 1994
(சனி) காலை 8 மணி

திறமையால் பிரபல்யமான திறமைமிக்க யாழ்.
முன்னணி ஆசிரியர் குழு

விஞ்ஞானம்: திரு. J. R. சூரி
கணிதம்: திரு. தயாளன்
சமூகக்கல்வி: திரு. கோபி
ஆங்கிலம்: திரு விஸ்வநாதன்
தமிழ்: திரு. திருப்பதி
வர்த்தகம்: திரு. கருணாகரன்
சமயம்: திரு. சங்கர்

புதிய பிரிவு
மாலை நேர வகுப்புக்கள் (3-6)

பிரிவு 2
O/L, ஆண்டு, 10, 9, 8, 7, 6
ஆரம்பம்: **10 - 12 - 94**
பிற்பகல் 2 மணி

(சி-9891)

மரண அறிவித்தல்கள்

சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்

மாதகலைச் சேர்ந்த சுப்பிரமணியம் இரத்தினசிங்கம். (ஓய்வுபெற்ற புகையிரத இலாகா ஊழியர், திருகோணமலை) 7-12-94 அன்று 20, சிவபுரி, திருகோணமலையில் காலமாகிவிட்டார்.

இவர் அன்னரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசரட்ணத்தின் அன்புத் தகப்பனாரும், தற்போது கிளிநொச்சியில் வசிக்கும் சுப்பிரமணியம் நடராசாவின் அன்புச் சகோதரரும், திருமதி சிவபாக்கியம் கதிரவேற்பிள்ளை. திருமதி இராஜலட்சுமி செல்லப்பா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-12-94 அன்று (வியாழக்கிழமை) திருகோணமலையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்:
கந்தையா செல்லப்பா
(தம்பி)

126/34 தோமஸ் வீதி,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(34107)

செல்வன் ரிதுசான் பாலச்சந்திரன்

முன்னாள் கொடிகாமம் பிரதேச சபை செயலாளரும் தற்போதைய பச்சிலைப்பள்ளி பிரதேச சபை செயலாளருமான திரு. ந. பாலச்சந்திரன் திருமதி வசந்தேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் ரிதுசான் 7-12-94 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் சியாமினி, தரிசன், ஜனுசன், சியந்தன் ஆகியோரின் சகோதரரும், சிவராஜா (சுவிஸ்), சற்குணம் (சுவிஸ்), திருமதி பாலலக்சுமி சிவப்பிரகாசம் ஆகியோரின் மருமகனும், கு. நவரத்தினம் (இராசா), திரு. திருமதி குமாரசாமி ஆகியோரின் அன்புப் பேரனும், திருவாளர்கள் செல்லத்துரை, கனகசபை, புண்ணியமூர்த்தி, பாலகிருஷ்ணன், சிவபாலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-12-94 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு மீசாலை புத்தூர்ச் சந்தியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ந. பாலகிருஷ்ணன்
(பெரிய தந்தை)

மீசாலை வடக்கு,
மீசாலை.

(34108)

கதிரிப்பிள்ளை அம்பலவாணர்

(இளைப்பாறிய ஆசிரியர் - ஏழாலை தெற்கு)

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கில் வசித்துவந்தவருமான கதிரிப்பிள்ளை அம்பலவாணர் நேற்று (08 — 12 — 1994) இயற்கை எய்தினார்.

இவர் காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னம்மா (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மயில்வாகனம், கந்தவனம், காலஞ்சென்ற சபாபதி, கனகம்மா, காமாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோமளவல்லி பரமநாதன் (தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை, யாழ்ப்பாணம்), சத்தியநாதன் (லண்டன்), நேமிநாதன், சுதர்சனா, உமாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தி. விநாயமூர்த்தி (யாழ். மாநகர சபை), வத்சலா, ரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சலஷா, சலோஜனன், வேணுஷா, பாலலோஜனன் கோபிஷா, நர்த்தனன், மகிதனன், சஜீவன், றஜீவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் இன்று வெள்ளிக்கிழமை (09-12-94) நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் தகனக் கிரியைக்காக பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
அ. பரமநாதன்
(மகன்)

சாம் வீதி,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

(34109)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற் லிமிற்டெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கதிலுள்ள அச்சகத்தில் 09—12—94 இல் அச்சிட்டு வெளிட்டப்பெற்றது.

கிழங்கு, வெங்காயம், மிளகாய்

தாராளமாக இறக்குமதி செய்யலாம்

புதிய அரசு அனுமதி

கொழும்பு, டிச. 9

உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் செத்தல் மிளகாய் ஆகிய உணவுப்பொருள்களை எவரும் தாராளமாக இறக்குமதி செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பொதுவான அனுமதிப்பத்திரத்தின் கீழ் இவற்றை எவரும் இறக்குமதி செய்யலாம்.

இத்தகவலை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் கிங்ஸ்லி விக்ரமரத்தின நேற்று வாராந்த செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை பற்றி தனியார் துறையினர் மத்தியில் நிச்சயமற்ற தன்மை நிலவிய காரணத்தினால் தான் பொருள்களின் விலைகளில் அதிகரிப்பு காணப்பட்டது.

அரசாங்கம் தொடர்ந்து சந்தைப் பொருளாதாரத்தைக் கடைப்பிடிக்குமா அல்லது 1970 க்கு முன்இருந்த கட்டுப்பாட்டுப் பொருளாதாரக் கொள்கை மீண்டும் அமுலுக்குவருமா என்பது பற்றி முடிவு செய்யமுடியாமல் தனியார் துறையினர் இருந்தனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஒ-எ)

வரிக் குறைப்புடன் அரிசி இறக்குமதி

சீனி விலை அதிகரிக்காது

கொழும்பு, டிச. 9

15 சதவீத வரிக் குறைப்பில் 12 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியைக் கொள்வனவு செய்வதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

கூட்டுறவுக் கடைகள் 16 ரூபா விலையில் ஒரு கிலோ அரிசியை விற்பனை செய்யும்.

அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமசிங்கா வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

சீனியின் விலையை கிலோ 2 ரூபாவாக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக வெளியான செய்திகளில் உண்மை இல்லை என்றும் அவர் கூறினார்.

அடுத்த 3 ஆண்டுகளுக்குத் தேவையான அரிசி, மா, சீனி ஆகியன கையிருப்பில் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஒ-எ)

உணவு முத்திரை:

திங்கட்கிழமைக்கு முன் விண்ணப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 9

வறுமை நிவாரண முத்திரை பெறாத பாடசாலைக்குச் செல்லும் 5 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள் உடைய குடும்பத் தலைவர்கள் தத்தமது பிரிவில் உள்ள கிராம அலுவலர்களுடன் இம்மாதம் 12 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தொடர்பு கொண்டு தமது பிள்ளைகளின் உணவு முத்திரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்குமாறு நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட திகதிக்குப்பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்களுக்கு உணவு முத்திரை வழங்கப்பட மாட்டாது என்றும் அறிவிக்கப்படுகிறது. (இ)

1980 ஜூலை வேலை நிறுத்தம்:

மீள வேலை கிடைத்தோர் சம்பள உயர்வு பெறுவர்

கொழும்பு, டிச. 9

★ 1980 ஜூலை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு மீண்டும் வேலை பெற்றவர்கள் பாரபட்சமின்றி சம்பள உயர்வு பெறுவார்கள் என்று அரசு தீர்மானித்துள்ளது.

★ கட்டாய லீவில் அனுப்பப்பட்டவர்கள் இன்னும் 55 வயதுக்குக் குறைந்தவர்களாக இருந்தால், அவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்வது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

★ கட்டாய ஓய்வில் அனுப்பப் பட்டவர்களின் நிலை பற்றி ஆராய அமைச்சர்கள் குழு ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

இத்தகவல்களை அமைச்சர் தர்மசிரி சேனநாயக்கா நேற்று வாராந்த செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

60 வயதில் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்குச் சமமான வகையில் 55 வயதுக்கும் குறைவாக இருந்து ஓய்வு பெற்றவர்களைக் கொண்டு வரும் நோக்கத்துடன் ஓய்வூரிமைகள் திருத்தப்படும்.

இந்த முடிவை அமைச்சரவை எடுத்துள்ளது. (ஒ-எ)

புதிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் இந்தக் குற்றச்சாட்டை முக்கிய எதிர்க்கட்சியான ஐ. தே. க. நிராகரித்துள்ளது.

தேர்தல் காலத்தில் பொ. ஐ. மு. அளித்த உறுதிமொழிகளைக் காப்பாற்ற இயலாத காரணமாகவே தொழிலாளரின் போராட்டங்கள் எழுந்துள்ளன என்று ஐ. தே. க. சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ-6)

ஆயிரம்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலை பருத்தித்துறை நோக்கி புறப்பட இருந்தது என்றும்—

இன்று காலை அது பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும்— செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பதில் அதிகாரி செல்வி நட்டதாஸ் தெரிவித்தார் (ஒ-3)

மௌன விரதம் நிறைவு நாள்

பூசை வழிபாடுகள் தடைப்பட்டுள்ள திருக்கேதீஸ்வரத்திலும், ஏனைய ஆலயங்களிலும் மீண்டும் அவை நடைபெறப் பிரார்த்தித்து வெள்ளிக்கிழமை தோறும் மௌன விரதம் அனுஷ்டிக்கப்பட்டு இன்றுடன் மூன்று வருடங்கள் நிறைவுபெறுகின்றன.

அதனையொட்டி இந்து இளைஞர் பேரவையினர் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

பேரவையின் யாழ். மாவட்டத்தலைவர் திரு.வே. கெ. தனபாலன் தமது மௌன விரதத்தை தொடர்ந்து அனுஷ்டிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி ஆண்டு

1996 ஆம் ஆண்டு உற்பத்தி ஆண்டாக பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

கைத்தொழில் அமைச்சர் சி. வி. குணரத்னா கொழும்பில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார். (ஐ-எ)

அரசு - புலிகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங் ஆகியோரைச் சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்தும் பேசினார்.

பிரதமர் நரசிம்மராவை புதன்கிழமை இரவு சந்தித்த அமைச்சர் கதிர்காமர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் இருந்து கொண்டு வந்த விசேட செய்தி ஒன்றையும் கையளித்தார்.

இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்துவதில் ஜனாதிபதி சந்திரிகாவும், அரசாங்கமும் பெருவிருப்பம் கொண்டுள்ளதாகவும் —

அரசியல், வர்த்தக, விஞ்ஞான, கலாசாரத் துறைகளில் பரஸ்பரம் ஒத்துழைக்கத் தயாராக உள்ளதாகவும் — அமைச்சர் கதிர்காமர் பிரதமர் நரசிம்மராவிடம் எடுத்துச் சொன்னார்.

விடுதலைப் புலிகளுடன் ஸ்ரீலங்கா அரசாங்கம் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க இருப்பது குறித்தும் —

நீண்ட கால இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு தமது அரசு முனைந்துள்ளது குறித்தும் அமைச்சர் கதிர்காமர் பிரதமரிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

ஸ்ரீலங்காவில் நடைபெற்ற பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல்கள் மூலம் மக்கள் சமாதானத் தீர்வை வலியுறுத்தி இருப்பதையும் திரு. கதிர்காமர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளுடன் ஸ்ரீலங்கா அரசு நடத்தும் பேச்சுவார்த்தைகளை இந்தியா ஆதரிக்கிறது. அந்தப் பேச்சுக்கள் சமாதானத்தைக் கொண்டுவர உதவும் என்று இந்தியா நம்புகிறது —

ஸ்ரீலங்கா நீண்டகாலமாக வன்செயல்களால் துன்பப்பட்டுவிட்டதாகவும், விரைவில் அமைதி திரும்ப வேண்டும் என்பதே எமது விருப்பம் — என்றும் பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி மற்றும் வெளியுறவு அமைச்சருடனும் ஸ்ரீலங்கா அமைச்சர் நடத்திய சந்திப்புகளின் போது ஸ்ரீலங்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான பலதரப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

சார்க் நாடுகளிடையே ஒத்துழைப்பைப் பலப்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது. (அ-இ-4-6)

அரச ஊழியர்களின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றது.

அரசாங்க ஊழியர்களுக்கு கிடைக்கும் சம்பளம் எந்த வகையிலும் வாழ்க்கை நடத்துவதற்குப் போதுமானது அல்ல என்றும் ஜனாதிபதி இம் மாநாட்டில் தெரிவித்தார்.

அரசாங்க நிறுவனங்களில் தொழிற் சங்கப்பிரதிநிதிகளையும் அதிகாரிகளையும் உள்ளடக்கிய ஆலோசனைச் சபைகளை இந்த மாதத்துக்குள் நிறுவ அரசாங்கம்தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார்.

தொழிற்சங்க உரிமைகளை எப்பொழுதும் ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கிறது என்றும் அவர் கூறினார். (இ-4)

ஹெந்தளையில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர் கடந்த 5 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

வத்தளை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இவரை எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு வத்தளை நீதிவான் திருமதி சுஜாதா அல்விஸ் உத்தரவிட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புடன் தொடர்புடைய குழுவைச் சேர்ந்தவர்கள் என பத்திரிகைகளில் வெளியான புகைப்படங்களில் இவரது படமும் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

குண்டை வெடிக்க வைத்தபெண்ணுடன் காணப்படும் புகைப்படத்திலும் பொதுமக்களுடன் கைதானவரும் காணப்படுகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ.6)

புலிகளுக்கு வெடிப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் ஒன்று இவற்றை ஏற்றிக்கொண்டு கடந்த ஒகஸ்ட் 25 ஆம் திகதி உக்ரேன் நாட்டுக்கரையை விட்டு புறப்பட்டதாக அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை இலங்கை அரசாங்கம் [illegible] பாதுகாப்புத்துறையினருக்கு அனுப்பியுள்ளது என்றும்—

இக்கப்பல் தொடர்பாக ஆராய்ந்த இலங்கை இராணுவ உளவுப் பிரிவு அதன் அறிக்கையை [illegible] அமைச்சுக்கு கையளித்திருப்பதாகவும்— சில வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (இ-எ)

பாப்பரசருக்கு காப்புறுதி

கொழும்புத்துறை, டிச. 9

வரலாற்றுச் சிறப்புமிக்க பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் இலங்கை விஜயம் முழுமையாக காப்புறுதி செய்யப்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பாப்பரசரின் கொழும்பு விஜயம் எந்தக் காரணத்துக்காகரத்துச் செய்யப்பட்டாலும், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனம் 30 லட்சம் ரூபாவரையிலான இழப்பீட்டை கொழும்பு அடி மேற்றிராணியாருக்கு வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கைக்கடிகாரம் தவறிவிட்டது

நேற்று (08 - 12 - 1994) காலை 9-00 மணியளவில் நாவலர் வீதி, பிறவுண் வீதி ஆகிய இடங்களில் அழகிய கற்கள் பதித்த பெண்கள் அணியும் கைக்கடிகாரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கருணையுடன் தந்து உதவவும்.

சன்மானம் தரப்படும்

தொடர்பு:
ரி. கிருஷ்ணானந்தம்,
841, கடற்கரை வீதி, பாஷையூர்.

[34106]

கண்ணீர் அஞ்சலி

திருமதி
வைத்திலிங்கம் இலட்சுமி அம்மாள்

யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை அபிவிருத்தி சபை உறுப்பினர்
வை. சண்முகநாதன் (மோகன்)
அவர்களின்
தாயார் காலமானதற்கு எங்கள் இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்தி சபை.

[34103]

கண்ணீர் அஞ்சலி

அமரர்
சி. சடாட்சரசண்முகதாஸ்

வடக்கு கிழக்கு மாகாணசபை கல்வி கலாசார அமைச்சின் மேலதிக செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் (மாகாண பொது நிர்வாகம்). கிராம அபிவிருத்திப் பணிப்பாளர்.

மக்களுக்காக சேவைசெய்து எல்லோருடைய நன்மதிப்பைப் பெற்று அரச சேவையில் அயராது உழைத்து பெருமைதேடிய அமரர் சி. சடாட்சரசண்முகதாஸ் அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தென்மராட்சி பிரதேச செயலர்
பணிமனை உத்தியோகத்தர்கள்
கிராம உத்தியோகத்தர்கள்
வெளிக்கள உத்தியோகத்தர்கள்

பிரதேச செயலகம்,
சாவகச்சேரி.

(சி/9801)

மரண அறிவித்தல்கள்

அருளம்பலம் குணரத்தினம்

காரைநகர் சம்பந்தர் கண்டியை சேர்ந்தவரும் தற்போது அக்கராயன் குளத்தில் வசித்தவருமான அருளம்பலம் குணரத்தினம் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அருளம்பலம் முத்தாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், மணிமேகலையின் அன்புக் கணவரும், ஜெயரத்தினம், இராசரத்தினம், விஜயரத்தினம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுபத்திரா, சித்திரா, செந்தில் நாதன் (கண்ணன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா, சர்வானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசாந்தி, பார்த்திபன், சிந்து ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி அக்கராயன் குளத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
கண்ணன்
(மகன்)

அக்கராயன் குளம்,
கிளிநொச்சி.

(34111)

சிதம்பரப்பிள்ளை சரவணமுத்து

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

15, சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சரவணமுத்து காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், தவராசா (லங்கா சிமெந்து லிமிட்.), ஜெயந்தியின் அருமைத் தந்தையும், சந்திரவதனி (ஆசிரியை, யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்), செல்வநாதன் (புறோமோட்டர்ஸ் எனஜினியரிங் வேர்க்ஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 9-12-94 இன்று பிற்பகல் 2 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
ச. தவராசா
(மகன்)

(34110)